இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 117 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 21 – ஞாயிற்றுக்கிழமை 07 டிசம்பர் 2025 – வெளியூர் 36 + 13 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 117: Thiruvalluvar Year - 2056 - Karthigai 21 - Sunday 07 December 2025 - Dak 36 + 13 Pages ₹ 5.00

### புரட்டுகளைப் பொசுக்கிய புரட்சியாளர் - அண்ணல்

# அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!

## நினைவு நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.7-**

**அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவுநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

புரட்டுகளைப் பொசுக்கிய புரட்சியாளர் அம்பேத்கர் நினைவுநாள்!

எல்லாவிதத்திலும் தன்னை அடக்கி ஒடுக்கும் ஓர் அமைப்புக்குள் இருந்து, கல்வி எனும் ஆயுதத்தால் அனைத்தையும் தகர்த்தெறிந்து மேலெழுந்த அறிவுச் சூரியன்தான் அம்பேத்கர். அன்று அவரை அடக்க நினைத்த அதே ஆதிக்கக் கூட்டம் இன்று அவரைத் துதிப்பது போல நடிக்கிறதே, அதுதான் அவரது வெற்றி.

அவரது வாழ்வே ஒரு பாடம்! அவரது போராட்டங்களே சமத்துவச் சமூகத்தை நோக்கிய பயணத்தில் நமக்கு ஊக்கம்! அண்ணல் அம்பேத்கர் எனும் பேரொளியின் வெளிச்சத்தில் தொடர்ந்து முன்னேறுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற, "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### தமிழகம் முழுவதும்

# 126 கிராமங்களில் அறிவுசார் மையங்கள்!

திருச்சி, டிச. 7 -

ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த கிராமப்புற மக்கள் கல்வியறிவு பெறவும், மாணவர்கள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையிலும் தமிழகம் முழுவதும் 126 கிராமங்களில் அறிவுசார் மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அரசாணையை தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வெளியிட்டுள்ளது.

கிராமப்புற ஆதிதிராவிட, பழங்குடியினருக்கு அரசின் நலத்திட்டங்களை அறிவித்தல், கல்வி மற்றும் இதர பயனுள்ள தகவல்களை வழங்குதல், விவசாயிகள், மாணவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளித்தல் என்ற அடிப்படையில் இந்த மையங்கள் செயல்படவுள்ளன. இதற்காக தமிழகத்தில் 126 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த மையத்தில் விவசாயிகள் சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி மையம், கணினி அறை, நூலக அறை, நிர்வாக அலுவலகம், ஆலோசனை வழங்கும் அறை, கழிப்பறைகள், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் இடம்பெறவுள்ளன.

# வடசென்னையில் 4 புதிய குளங்கள்!

### மாநகராட்சி அமைத்தது!

சென்னை, டிச. 7 -

பருவமழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்க வடசென்னையில் 73 லட்சம் கன அடி வரை நீரைச் சேமிக்கும் வகையில் 4 புதிய குளங்களை மாநகராட்சி அமைத்துள்ளது.

வடசென்னையில் வியாசர்பாடி பழைய கூட்செட் சாலையில் ரயில்வேக்குச் சொந்தமான 2 ஏக்கர் பரப்பளவிலான குளத்தை ரயில்வே துறையிடம் அனுமதி பெற்று 7 ஏக்கர் பரப்பளவில் ரூ.1.15 கோடி மதிப்பில் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்துள்ளது. இந்த குளத்தில் 10அடி ஆழத்தில் 1.16 லட்சம் கன அடி தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும்.

இதேபோல, திருவொற்றியூர் கார்கில் நகர் பகுதியில் சாதாரண மழைக்கே பொதுமக்கள் நிவாரண முகாம்களுக்குச் செல்லும் நிலை இருந்தது. அதைத் தடுக்கும் வகையில் தற்போது அந்த பகுதியில் ரூ.9 கோடி மதிப்பில் புதிய குளம் உருவாக்கப்பட்டுள்ளது. 23 அடி ஆழம் உள்ள இந்த குளத்தில் 1.05 லட்சம் கன அடி நீரை சேகரிக்கலாம்.

இதுகுறித்து மாநகராட்சி துணை ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு 31 புதிய குளங்கள் உருவாக்கப்பட்டு, 47 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் மழை நீரை வெளியேற்றும் பணிக்காக மட்டுமல்லாமல் நிலத்தடி நீர் மட்டத்தையும் அதிகரிக்க குளங்கள் அமைக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு 87 இடங்கள் மழைநீர் தேங்கும் இடங்களாக அடையாளம் காணப்பட்டன. இந்தாண்டு 61 இடங்களில் தண்ணீர் தேங்கியது. அதில் பெரும்பாலான இடங்களில் ஒரே நாளில் தண்ணீர் வடிந்தது. மழைநீர் வெளியேற்றுவதற்கு மழைநீர் வடிகால் முக்கியமானது. ஆனால் மழைநீர் வடிகால் மட்டுமே தீர்வு கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

